**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC No.251/2020** **Date : 23/08/2022**

<u>**PW** 2 **(சரவணகுமார்) குறுக்கு விசாரணை : (எதிரி தரப்பில்)** மனு எண். 3179/2022 அனுமதிக்கப்பட்டு, சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

தினமும் எங்களுக்கு பணி ஒதுக்கீடு நான் டிராபிக் விங்கில் பணி செய்த போது இருந்தது. எனக்கு மேலதிகாரியாக காவல் ஆய்வாளர் இருந்தார். அவர் ஒதுக்கப்பட்ட பணியின் அடிப்படையில் தான் நாங்கள் பணிக்கு செல்வோம் என்றால் சரிதான். அ.சா.1 ஜெயபால் என்பவர் முதல்நிலை காவலர். சம்பவத்தின் போது எனக்கு பழைய பேருந்து நிலையத்தில் பணி ஒதுக்கப்பட்டிருந்தது. பணி நேரம் எனக்கு ஒதுக்கப்பட்டிருந்ததா என்றால் பொதுவாக காவலர்களுக்கு மட்டும் தான் அவ்வாறு ஒதுக்கப்படும். அதிகாரிகளுக்கு பணி நேரம் என தனிப்பட்ட முறையில் ஒதுக்கப்படாது. பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்ற போது நானும் சென்றேன். ஜெயபாலும் என்னுடன் வந்தார். புகாரை அவர் தான் எழுதிக் கொடுத்தாரா என்றால் ஆம். அ.சா.1 புகாரில் நான் உடன் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் நான் அவருடன் இல்லை. ஆனால் சற்று தொலைவில் எனது பணியை செய்து கொண்டிருந்தேன். பழைய பேருந்து நிலையத்தில் மதரஸா ஸ்கூல் ரோடு/ஆத்தூர் ரோட்டில் ஆட்டோக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று

JMPERAMBALUR

சுமார் 25 ஆட்டோக்கள் அந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருக்குமா என்றால் இருக்கலாம். ஆஜர் எதிரி ஆட்டோக்களின் வரிசையில் மூன்றாவதாக அவரது ஆட்டோவை நிறுத்தி வைத்திருந்தார் என்றாலும், அவருக்கு முன் 2 ஆட்டோக்கள் நிறுத்தப்பட்டிருந்தது என்றாலும் எனக்கு தற்போது நினைவில்லை. காவல்துறையினர் விசாரணையின் போது எந்த இடத்தில் எதிரி ஆட்டோவை நிறுத்தி வைத்திருந்தார் என இடத்தை குறிப்பிட்டு நான் கூறவில்லை என்றால் சரிதான். செல்போன் பேசிக் கொண்டு ஆட்டோ ஓட்டி கொண்டு வந்தால் மோட்டார் வாகன சட்டத்தின்படி தண்டத் தொகை வசூலிக்க முடியும் என்றால் சரிதான். செல்போன் ஓட்டிக் கொண்டு வந்தார் என எதிரியின் மீது எந்தவித தண்ட நடவடிக்கையும் நான் எடுத்தேனா என தற்போது நினைவில்லை. இது சம்மந்தமாக காவல்துறையினர் விசாரணையின் போதும், கூறினேனா என எனக்கு நினைவில்லை. ஊர்க்காவல் படையினருக்கு ஒதுக்கப்படும் பணிகளை நாங்கள் தான் டிராபிக் சம்மந்தமான பணிகளுக்கு ஒதுக்குவோம். பணி ஒதுக்கப்பட்ட பணியாளர்களுக்கான ஆவணங்களை நாங்கள் பராமரிப்பதில்லை. அவர்களுக்கென தனி அலுவலகம் உள்ளது. அன்றைய தினத்தில் எந்தெந்த ஊர்க்காவல் படையில் பணிபுரிந்தவர்கள் எங்களிடம் பணிபுரிந்தார்கள் என எங்களுக்கு தெரியும் என்றால் எனக்கும் தெரியும். காவல் ஆய்வாளருக்கும் தெரியும். தகராறு நடந்து எவ்வளவு நேரத்தில் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சம்பவ இடத்திற்கு சற்று தொலைவில் நான் நின்று கொண்டிருந்ததால் சத்தம் கேட்டு சென்றேன். யாரும் எனக்கு தகவல்

கொடுக்கவில்லை. நான் சம்பவ இடம் சென்ற போது மற்ற ஆட்டோ ஓட்டுநர்கள் அவர்களை சமாதானம் செய்துக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடமாக கூறப்படும் பழைய பேருந்து நிலையத்தில் டவுன் பஸ்களும், மினி பஸ்களும் செல்லும் அதிக போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரிதான். நான் நின்ற இடத்தில் இருந்து ஆட்டோ நின்ற இடத்தை நேரடியாக பார்க்க முடியாது என்றால் சரியல்ல. நான் எந்த இடத்தில் நின்று கொண்டிருந்தேன் என்றும் எவ்வளவு தொலைவு நின்று கொண்டிருந்தேன் என்றும் காவல்துறை விசாரணையின் போது கூறவில்லை என்றால் சரிதான். நான் சரியாக பழைய பேருந்து நிலையம் உள்ளே மதரஸா ரோடு நுழைவாயிலில் வாகன சோதனை செய்து கொண்டிருந்தேன். நுழைவாயிலில் ஆரம்பித்து தான் ஆட்டோக்கள் நிற்கும் என்றால் வடக்கு பக்கமாக நிற்கும். எதிரி ஆட்டோவில் இருந்த இரும்பு ராடை எடுத்து கொல்லாமல் விடமாட்டேன் என கூறியதாக சொல்லப்படும் இரும்பு ராடை நான் காவல்துறையினரிடம் ஒப்படைக்கவில்லை. நான் தான் பெரம்பலூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தை நான் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரிக்கு காண்பித்தேனா என்றால் அ.சா.1 தான் காண்பித்தார். இது சம்மந்தமான தகவலை நான் எனது மேலதிகாரியான காவல் ஆய்வாளருக்கு அன்றைய தினம் தெரிவித்தேன். நான் காவல் ஆய்வாளருக்கு தெரிவித்தேன் என்றும், அவர் எதிரியின் மீது நடவடிக்கை எடுக்க கூறினார் என்றும், நான் விசாரணையின் போது கூறினேன். எந்த தேதியில் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார்

JUNO.AI - PUBLR

என நினைவில்லை. அன்றைய தினம் விசாரித்தாரா அல்லது அதன் பின்பு விசாரித்தாரா என எனக்கு நினைவில்லை. புகார்தாரரை எப்போது விசாரித்தார் என நினைவில்லை. நான் எதிரியை அழைத்து செல்லும் போது ஜெயபால், ராணி மற்றும் முனியமுத்து ஆகியோர் என்னுடன் வந்தனர். பழைய பேருந்து நிலையத்தில் இருந்து பெரம்பலூர் காவல் நிலையம் நடந்து சென்றால் கூட அதிகபட்சம் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றேன் என நினைவில்லை. ஜெயபாலை மருத்துவமனைக்கு நான் போகும்படி கூறினேன். நான் செல்லும் போது பிரேம்குமார் என்ற உதவி ஆய்வாளரும் செங்குட்டுவன் என்ற ஆய்வாளரும் காவல்நிலையத்திற்கு வந்தனர். ஜெயபால் ஆஜர் எதிரியிடம் என்ன பேசினார் என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி ஜெயபாலிடம் எந்தவித தகராறும் செய்யவில்லை என்றாலும், அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் விசாரணை ஏதும் செய்யாமல் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் சம்பவ நேரத்தில் நான் அந்த பகுதியில் பணியில் இல்லை என்றாலும், நானும் பிரேம்குமாரும் கேள்விபட்டு தான் அங்கு சென்றோம் என்றால் நான் பணியில் இருந்தேன். பிரேம்குமார் கேள்விபட்டு தான் வந்தார். சம்பவ இடம் போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி என்றாலும், அங்கு எதிரி அவரது ஆட்டோவை செல்போன் பேசிக் கொண்டு ஓட்டவில்லை என்றாலும் அவர் வாகனத்தை தனது வரிசை வருவதற்காக நிறுத்தி வைத்திருந்தார் என்றாலும்

JMJ,NO,1,PUBLR

சரியல்ல. அ.சா.1-ன் சட்டை கிழிந்ததென்று நான் சாட்சியத்திற்கான சட்டையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் சட்டை பட்டன் கிழிக்கப்பட்டிருந்தது. ஜெயபால் என்பவர் தான் எதிரியிடம் தகராறு செய்தார் என்றாலும், எதிரி அவர் மீது புகார் கொடுத்துவிட கூடாது என்பதற்காக நாங்கள் கலந்து பேசி எதிரியின் மீது பொய்யான புகாரை பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. முனியமுத்து மற்றும் ராணி ஆகிய ஊர்க்காவல் படையை சேர்ந்தவர்கள் பழைய பேருந்து நிலையத்தில் எங்களுக்கு உதவியாக என்னுடன் இருந்தார்கள். நான் சென்ற போது என் பின்னாலேயே அவர்களும் அந்த சம்பவ இடத்திற்கு வந்தனர். எனக்கு இந்த வழக்கை பற்றி எந்த விபரமும் தெரியாது என்றாலும், அ.சா.1 கொடுத்த புகாரை அனுசரித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.

JMNO1,PBLR